**சுருக்கம்**

எரிவாயு இணைப்புகள் – ஒரு உருளை கொண்ட எரிவாயு இணைப்பு பெற்றுள்ள பயனாளிகளுக்கு எரிவாயு உருளை விற்பனை விலையில் ஒரு உருளைக்கு ரூ.30 மாநில அரசு மானியமாக வழங்க– ஆணை வெளியிடப்படுகிறது.

– – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – –

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சி1) துறை**

**அரசு ஆணை 3(டி) எண்: 8** **நாள் : 30–6–2008.**

**ஆணை:**

ஒரு உருளை கொண்ட எரிவாயு இணைப்பு பெற்றுள்ள பயனாளிகளுக்கு எரிவாயு உருளை விற்பனை விலையில் ஒரு உருளைக்கு ரூ.30 மாநில அரசு மானியமாக வழங்கலாம் என அரசு முடிவெடுத்தது.

**2.** இந்த திட்டத்தை நிறைவேற்றும் செயல்முறை குறித்து முடிவு செய்ய எண்ணெய் நிறுவன உயர் அலுவலர்கள் மற்றும் அகில இந்திய எரிவாயு விநியோகஸ்தர்களின் கூட்டமைப்புத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் ஆகியோருடன் கலந்தாலோசிக்கப்பட்டது. இக்கலந்தாய்வில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் இத்திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து அரசு பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப்பின் ஒரு உருளை கொண்ட எரிவாயு இணைப்பு பெற்ற பயனாளிகளுக்கு எரிவாயு உருளை விற்பனை விலையில் ஒரு உருளைக்கு ரூ.30/–மானியமாக வழங்க அரசு ஆணையிடுகிறது.

**3.** இத்திட்டத்தை செயல்படுத்தும் போது கீழ்க்கண்ட நடைமுறைகள் பின்பற்ற வேண்டும் என அரசு ஆணையிடுகிறது :–

(i) இத்திட்டம் சென்னையில் துணை ஆணையர்கள் மூலமாகவும், பிற மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கண்காணிப்பிலும் செயல்படுத்தப்படும்.

(ii) இத்திட்டத்திற்கான நிதி நுகர்பொருள் வாணிபக்கழகத்திற்கு விடுவிக்கப்பட்டு மாவட்டந்தோறும் சம்பந்தப்பட்ட மண்டல மையங்கள் மற்றும் முதுநிலை மண்டல மையங்கள் பட்டியலை பரிசிலித்து மாவட்ட ஆட்சியர்கள்/துணை ஆணையர்கள் ஒப்புதல் பெற்று மானியம் விடுவிக்கப்படவேண்டும்.

(iii) இத்திட்டம் தொடங்கு முன் ஒவ்வொரு மாவட்டங்களிலும் முகவர்களிடம் உள்ள ஒரு உருளை இணைப்புகள் மற்றும் இரு உருளை இணைப்புகள் விவரம் மற்றும் மே 2008ல் ஒரு உருளை இணைப்பில் விற்பனை செய்யப்பட்ட விவரம் பெறப்படவேண்டும்.

(iv) ஜூலை, ஆகஸ்டு மாதங்களுக்கு மே 2008 விற்பனை அடிப்படையில் முன்பணம் விடுவிக்கப்படவேண்டும். எரிவாயு முகவர்கள் பயனாளி வாரியான விற்பனை விவரத்தை குறிப்பிட்ட படிவத்தில் ஜுலை மாத பட்டியலை செப்டம்பர் 2008–லும், ஆகஸ்ட் மாத பட்டியலை அக்டோபர் என மாதந்தோறும் நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல அலுவலகங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும். மண்டல மேலாளர்கள் பட்டியலை பரிசீலித்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் துணை ஆணையர்கள் ஒப்புதல் பெற்று மாதந்தோறும் மானியத்தை விடுவிக்க வேண்டும்.

(v) எரிவாயு முகவர்கள் ஒரு உருளை இணைப்பிற்கு விற்பனை செய்யும்போது குடும்ப அடையாள அட்டைகள் எண்களை குறிக்க வேண்டும். ஒரு உருளை இணைப்பிற்கான விற்பனைக்கு பில் பட்டியலை முகவர்கள் தனியாக பராமரிக்க வேண்டும்.

(vi) ஒரு உருளை இணைப்பிற்கு தயாரிக்கப்படும் பட்டியலில் மட்டும் 14.2 கிலோ உருளைகளுக்கு மாநில அரசு மானியமாக ரூ.30 கழிக்கப்பட்டும், 5 கிலோ உருளைகளுக்கு ரூ.11 கழிக்கப்பட்டும் பட்டியல் தயாரிக்கப்படவேண்டும்.

(vii) பட்டியல் புத்தகங்கள் தயாரித்தல், பட்டியல் சமர்ப்பித்தல் போன்ற பணிகளுக்கு ஏற்படும் நிர்வாக செலவுகளுக்காக எரிவாயு முகவர்களுக்கு உத்தேச ஒதுக்கீடாக மாதம் ஒன்றிற்கு ரூ.1000 வழங்கப்படும்.

(viii) மேலும் இத்திட்டம் ஒரு உருளை இணைப்புகள் பெற்றுள்ள குடும்பங்களுக்கு மட்டுமே பொருந்தும். ஒரு உருளை இணைப்பு பெற்ற நிறுவனங்களுக்கு இது பொருந்தாது. ஒரு உருளை இணைப்பிற்கு மொத்த விலைக்கு பட்டியல் தயாரித்து பின்னர் மொத்த விலையிலிருந்து மாநில அரசு வழங்கும் மானிய தொகையை குறைத்து நிகரத் தொகை குறிப்பிடப்படவேண்டும்.

4. இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 80 கோடி 2008–2009 நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேலும், ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களுக்குத் தேவையான ரூபாய் 18 கோடியை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு முதல் தவணையாக வழங்கி அரசு ஆணை வெளியிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் புதிய கணக்கு தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:–

"3456 – 00 – நுகர்பொருள் வழங்கல் 103. நுகர்வோர் உதவித் தொகைகள் – I திட்டத்தில் சேராதது – AG. வீட்டு உபயோக எரிவாயு உருளைகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகை – 11. மானியங்கள் 01. தனித்திட்ட மானியம் (த.தொ.கு.. 3456 00 103 AG 1110)"

6. மேலே கூறப்பட்டுள்ள புதிய கணக்குத் தலைப்புக்கு, மதிப்பீடு சரிபார்த்தல் மற்றும் கட்டுப்படுத்தும் அதிகாரியாக உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் செயல்படுவார்.

7. சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர், மேலே கூறப்பட்டுள்ள புதிய தலைப்பு ஒன்றினை தங்கள் கணக்கின்கீழ் ஆரம்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8. இச்செலவினம் "புதுப்பணி" குறித்த செலவினமாகும். சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் உரிய நேரத்தில் பெறப்படும். சட்டமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி முதற்கண் இச்செலவினம் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணமாக பெற்று மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு–செலவு–I) துறையினால் வெளியிடப்படும். இச்செலவினத்தை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவையான முன்பணமாக பெறுவதற்கு உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் வரையறுக்கப்பட்டப் படிவத்தில் தக்க முன்மொழிவுகளை நிதித் (வரவு–செலவு I) துறைக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2008–2009–ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீட்டில் சேர்த்துக்கொள்ள ஒரு வரைவு விளக்கக் குறிப்பினை நிதித் (வரவு–செலவு I) துறைக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.296/SS(PK)/08 நாள் 30–6–2008 ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்படுகிறது. கூடுதல் பேரேடு எண்.332 (முன்னூற்று முப்பத்தி இரண்டு).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க.சண்முகம்,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
ஆணையாளர், உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை–5.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை–10.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

ஆணையாளர் மூலமாக).
சம்பள கணக்கு அலுவலர், சென்னை—5 / 9.
மாநில கணக்காய்வாளர், சென்னை—9/18/35.
நிதித் (வரவு செலவு—I & II/ கூ.உ.ம.நு.பா.) துறை, சென்னை—9.
மாநில எண்ணெய் ஒருங்கிணைப்பாளர், இந்தியன் ஆயில் கார்ப்பேரஷன் லிமிடெட், 139, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை—34.
பொது மேலாளர், (தெற்கு சில்லறை), பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட், நெ.1, ரெங்கநாதன் தோட்டம், 11—வது தெரு, அண்ணா நகர், சென்னை—40.
பொது மேலாளர் (தெற்கு மண்டலம்), இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பேரஷன், தாளமுத்து நடராஜன் மாளிகை, 8, காந்தி இர்வின் ரோடு, எழும்பூர், சென்னை—8.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை—9.
மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—9.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை—9.

ஆணைப்படி / அனுப்பப்படுகிறது

ஓம்/...
பிரிவு அலுவலர்.